27.01.2026.

STC.624/2025

புகார்தாரர் லட்சுமி, க/பெ.கிருஷ்ணமூர்த்தி

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட டி.வி.சி.எண்.3/2023 உத்தரவிற்கு எதிராக எதிரி திருவண்ணாமலை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான் அந்த மேல்முறையீடு வழக்கில் நான் எதிர்மனுதாரராக ஆஜராகியுள்ளேன். எதிரி தாக்கல் செய்த மேற்படி மேல்முறையீடு வழக்கானது ஆரணி மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றலான விவரம் தெரியுமா என்றால் தெரியும் ஆனால் எனக்கு சம்மன் வரவில்லை நான் ஆண்லைன் மூலமாக வாய்தா தேதி தெரிந்துகொண்டு ஆரணி மாவட்ட நீதிமன்றத்தில் 17.12.2025ம் தேதி ஆஜரானேன். மேற்படி வழக்கின் மறு தேதி 28.01.2026ம் தேதி போடப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியும். நான் எதிரிக்கு எதிராக ஏற்கனவே செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கில் இடைக்காலமாக ஜீவனாம்சம் கோரியிருந்தேன் என்றால் சரிதான். அந்த இடைக்கால உத்தரவின்மீது எதிர்மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்திற்கு மேல்முறையீட சென்றார் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டில் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்படி 2023ம் ஆணடு ரூ.1,75,000/- நிலுவை தொகை பெற்றேன் என்றால் சரிதான். அதன் பின்னர் எந்தவொரு இடைக்கால ஜீவனாம்ச தொகையும் எதிரி கொடுக்கவில்லை. மேற்படி இடைக்கால மனுவில் எனது சீர்வரிசை பொருட்களை கேட்டும் பரிகாரம் கேட்டிருந்தேன் என்றால் சரிதான். ஆனால் இதுநாள்வரை எந்தவொரு பொருளையும் எதிரி தரவில்லை. இந்த மனு இதுநாள்வரை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் எதிரி சீதன பொருட்களை ஒப்படைக்க மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அவர் ஒப்படைக்க வந்த பொருட்கள் அனைத்தும் சேதம் அடைந்திருந்ததால் நான் பெற்றுக்கொள்ளவில்லை. எனது சீர்வரிசை பொருட்கள் அனைத்தும் எனது திருமணத்தின்போது கொடுத்தது என்றால் சரிதான். எதிரி தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட சீர்வரிசை பொருட்களை திரும்ப ஒப்படைப்பதற்கான உத்தரவினை நிறைவேற்ற தயாராக இருந்தும் நான் தான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. சீர்வரிசை பொருட்கள் சேதமடைந்திருந்ததால் நான் பெற்றுக்கொள்ளவில்லை. மேற்படி சீர்வரிசை பொருட்களை எதிரி பயன்படுத்தாமல் வைத்திருந்து ஒப்படைத்ததை நான் தான் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரி தற்போதும் சீர்வரிசை பொருட்களை ஒப்படைக்க தயாராக உள்ளார் என்றும், மேற்படி பொருட்களில் ஏற்பட்ட சேதத்தினை சரிசெய்ய உரிய பணத்தையும் கொடுக்க தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. அதேபோல் எதிரி எனக்கு வாழ்க்கைக்குறிய தொகையினை மொத்தமாக செலுத்த தயாராக உள்ளார் என்றாலும் நான் தான் அதனை வாங்க மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

இவ்வழக்கானது எதிரி டி.வி.சி.வழக்கிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு முன்பே நான் தாக்கல் செய்துவிட்டேன். தற்போது நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் வீட்டில்தான் இருந்து வருகிறேன். நான் தனியார் மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருவதை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. டி.வி.சி வழக்கிற்கு எதிராக மேல்முறையீடு நிலுவையில் இருந்து வருவதால் இந்த புகார் நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.